# வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்

**01**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 10

## வணிகப் பிண்ணனி

1. பண்டமாற்று முறை என்றால் என்ன?
2. வியாபாரம் என்றால் என்ன?
3. இலாபநோக்குடைய வணிகத்தின் பிரதான நோக்கங்கள் 2 ம் உப நோக்கங்கள் 3ம் தருக?
4. தேவைகள் மற்றும் விருப்பங்கள் என்ற கருத்துக்களை உதாரணங்களுடன் வியக்குக?
5. தேவைகள் மற்றும் விருப்பங்கள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் 4 தருக?
6. உற்பத்தி என்றால் என்ன?
7. உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்களின் பண்புகளின் அடிப்படையில் வணிகத்தினை வகைப்படுத்திக் காட்டுக?
8. உற்பத்திக் காரணிகள் என்றால் என்ன?
9. உற்பத்திக் காரணிகள் 4 பெயரிடுக ?
10. வியாபாரம் தொடர்பில் ஆர்வம் காட்டுபவர்கள் யாவர்?
11. வியாபாரம் தொடர்பில் ஆர்வம் காட்டும் 04 நபர்கவளக் குறிப்பிடுக?
12. கீழே காட்டப்பட்டுள்ள வியாபாரம் தொடர்பில் ஆர்வம் காட்டுபவர்களுக்கு 2 நோக்கங்கள் வீதம் குறிப்பிடுக?

| ஆர்வம் காட்டுபவர்கள் | நோக்கம் |
|---|---|
| உரிமையாளர்கள் | i.<br>ii. |
| முகாமையாளர்கள் | i.<br>ii. |
| ஊழியர்கள் | i.<br>ii. |
| கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுபவர்கள் | i.<br>ii. |

13. கீழே காட்டப்பட்டுள்ள நோக்கங்கள் தொடர்பில் வியாபாரத்தில் ஆர்வம் காட்டுபவர்களைக் குறிப்பிடுக?

| நோக்கம் | ஆர்வம் காட்டுபவர்கள |
|---|---|
| தொடர்ச்சியான கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளுதல் | |
| வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெறுதல் | |
| பெறப்பட வேண்டியவ வரி வரு-மானங்களை உரியமுறைளில் பெற்றுக்கொள்ளல் | |
| தன்னுடைய உற்பத்திக்கான விலையைத் தீர்மானித்தல் | |

Commerce and Business Studies Branch

14. வியாபாரத்தில் ஆர்வம் காட்டுபவர்களிடமிருந்து வணிகமானது குறிப்பிட்ட பலவற்றினை எதிர்பார்ப்பது போன்று வியாபாரத்தில் ஆர்வம் காட்டுபவர்களும் சில சில ஒத்துளைப்புக்களை எதிர்பார்ப்பார்கள். அதற்கு அமைவாக கீழ்க் காட்டப்பட்டுள்ள வியாபாரத்தில் ஆர்வம் காட்டுபவர்களிடமிருந்து வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்பக்களையும் இணைக்குக.

| <u>வியாபாரம் தொடர்பில் ஆர்வம் காட்டுபவர்கள்</u> | **பங்களிப்புக்கள்** |
|---|---|
| A. .உரிமையாளர்கள் | P.வியாபாரத்துக்காக பல்வேறு சாதகமான சேவைகளை வழங்குதவ். |
| B..முகாமையாளர்கள | Q..தரமான மூலப் பொருட்களை தொடர்ச்சியாக வழங்குதல் |
| C. ஊழியர்கள் | R.சரியான தீர்மானங்களை எடுத்தல் |
| D. வழங்குனர்கள் | S..ஊழியர்களின் உற்பத்தித் திறனை அதி-கரித்தல் |
| E. அரசாங்கம் | T..வணிக நடவடிக்கைகளின் மேற்பார்வை |

- ரீ சேட்களைத் தைக்கும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஜகத் கொரோணா பெருவாரியாகப் பரவும் தொற்றுநோய் ஆரப்பிதில் இருந்து முகக்கவசங்களைத் தைத்து விற்பனை செய்வதற்குத் தீர்மானித்தார். அதற்கு ஆக அவரினால் தையல் இயந்திரமொன்றை கொள்வனவு செய்ததுடன் புதிய ஒரு ஊழியரையும் நியமித்துள்ளார்.

15. மேற்குறித்த சம்பவத்துக்கு அமைவாக ஜகத்தின் வியாபாரத்தின் மூலம் நிறைவேற்றப்படும் தேவைகளாவன,

1) உணவு, ஆடை
2) ஆடை, பாதுகாப்பு
3) ஆடை, வீடு
4) ஆடை, சுகாதாரம்

16. மேற்குறித்த சம்பவம் தொடர்பாக ஜகத்தின் வியாபாரம் தொடர்பான தவறான கூற்றினைத் தெரிவு செய்க.

1) பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகம் ஆகும்.
2) சேவை வழங்கும் வணிகம் ஆகும்.
3) இலாப நோக்கத்துடன் அமைந்துள்ள வணிகம் ஆகும்.
4) தனியார் துறை வணிகம் ஆகும்.

17. மேற்குறித்த சம்பவத்தில் காணக் கூடியதாக உள்ள உற்பத்திக் காரணிகளாக அமைவன,

1) நிலம், முயற்சி
2) மூலதனம், நிலம்
3) மூலதனம் உழைப்பு
4) நிலம், உழைப்பு

18. மேற்குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சரியான வியாபாரத்தில் ஆர்வம் காட்டுபவர்களைக் கொண்டு அமைந்துள்ள விடையைத் தெரிவு செய்க.

1) உரிமையாளர், ஊழியர்கள்
2) ஊழியர்கள், போட்டியாளர்கள்
3) போட்டியாளர்கள், நிதி நிறுவனங்கள்
4) ஊழியர்கள், வழங்குனர்கள்

19. வணிகமானது ஊழியர்களிடமிருந்து எதிர்பார்க்கும் பங்களிப்புக்களாவன,

1) போதுமான மூலதனத்தினைப் பெற்றுக்கொள்ளுதல்
2) சரியான தீர்மானங்களை எடுத்தல் மற்றும் திட்டங்களை உரிய வகையில் நடைமுறைப்படுத்துதல்.
3) தமக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை உரிய வகையில் நடைமுறைப்படுத்துதல்.
4) சுாதாரண சம்பளத்தினைப பெற்றுக் கொள்ளுதல்

Commerce and Business Studies Branch

20. வணிகத்தில் ஆர்வமுள்ள தரப்பினரின் சில நோக்கங்கள் பின்வருமாறு.

A – போதுமான இலாபம் ஈட்டுதல்

B - சமூக நலனுக்கு பங்களிப்பதா என்பதை ஆராய்தல்.

C - வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்குதல்.

D - வேலை அபிவிருத்தி மற்றும் திருப்தி.

E - தரமான உற்பத்திகளை பெற்றுக் கொள்ளுதல்.

மேலே காட்டப்பட்டுள்ள இலக்குகளை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வணிகத்தில் ஆர்வம் காட்டும் தரப்பினர்களை ஒழுங்கு வரிசையில் காட்டும் விடையாவது.

1) உரிமையாளர், சமூகம், அரசு, முகாமையாளர், கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோர்.
2) உரிமையாளர், கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோர்ர, சமூகம், முகாமையாளர், வழங்குனர்.
3) உரிமையாளர், எதிர்கால முதலீட்டாளர்கள் முகாமையாளர, அரசு, சமூகம்.
4) உரிமையாளர், அரசு, முகாமையாளர, ஊழியர்கள், சமூகம்,

21 மூலதனம் என்ற உற்பத்திக் கரணியினுள் உள்ளடங்காத எது?

1) இயந்திரங்கள்
2) கட்டடங்கள்
3) கனிய வளம்
4) பணம்

22. முயற்சியாளர் பற்றிய சரியாக கூற்றைத் தெரிவு செய்க..

1) வணிகத்தினை ஆரம்பித்து நடாத்திச் செல்பவர்.
2) வணிகத்தின் அபாயத்தினை தாங்கிக்கொண்டு நவீன செயற்பாடுகளில் ஈடுபடுபவர்.
3) வணிகத்துக்கு தலைமைத்துவத்தினை வழங்கும் தனி நபர்.
4) வணிகத்துக்கு நிதி முதலீடு செய்பவர்.

23. சேவை வழங்கும் நிறுவனங்களை மட்டும் உள்ளடக்கிய விடைத் தொகுதி.

1) மக்கள் வங்கி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இசுறு நெல் ஆலை
2) மருந்து விற்பனைக்கடை, அபிமன் அரிசி ஆலை, இலங்கைப் போக்குவரத்துச் சபை
3) அழகுக் கலை நிலையம், ஆடைத் தொழிற்சாலை, மொத்த விற்பனை நிலையம்.
4) சில்லறை விற்பனை நிலையம், வைத்தியசாலை, தேனீர் விற்பனை நிலையம்.

24,முதலீட்டுப் பாதுகாப்ப இலக்கு தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்சியினராக அமைபவர்கள்.

1) ஏதிர் கால முதலீட்டாளர்கள்
2) உரிமையாளர்கள்
3) முகாமையாளர்கள்.
4) அரசாங்கம்

Commerce and Business Studies Branch

பின் வரும் கூற்றுக்கள் உண்மையானவையா / பொய்யானவையா எனக் குறிப்பிடுக..

25.முன்னைய காலத்தில் அதிகமாக உற்பத்தி செய்தல் காரணமாக பொருட்களின் பண்டமாற்று முறை அறிமகமானது. (......................................)

26.பொருட்களை உற்பத்தி செய்தல் வணிகம் என்று அழைக்கப்படும். (...........................)

27. தற்போது சில வணிகக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்காக நவீன மின் அணு ஊடகங்கள் பாவிக்கப்படுகின்றன. (..............................)

28.வணிகத்தின் நிலைத்திருத்தலானது வணிகத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுபவர்பளின் வருமான மட்டங்களைப் பொறுத்ததாகும். (................................)

29.ஒவ்வொரு தனி நபர்களினதும் தேவைகள் சமமானவை. (......................................)

30.உயிர் வாழ்வதற்காக சில தேவைகளைப் பூர்த்தி செய்தல் கட்டாயமாகும். (...............................)

31.தொட்டு உணரக்குடிய பௌதீக அமைப்பைக் கொண்டவை பொருட்கள் என அழைக்கப்படும். (........)

32.வணிக நடவடிக்கைகளினை கண்காணித்தல் மற்றும் வணிகம் தொடர்பான தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் ஆகியன அரசாங்கத்தினால் செய்யப்படுகின்றது. (......................................)

33.வாடிக்கையாளரினால் மீண்டும் விற்பனைக்காக அல்லது பாவனைக்காக பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன (.................................)

34.வணிகத்துக்கு வாய்ப்பான சலுகைகளை வழங்குதல் அரசாங்த்தின் நோக்கமாகும். (..........................)

35. தினுஷவினால் இறக்குமதி செய்யப்பட்ட கிருமி ஒழிப்புத் திரவங்களைக் கொண்ட போத்தல்கள் மற்றும் முகக் கவசங்கள் என்பன பிரதான வீதிக்கு அண்மையில் ஒரு வாகனத்தில் வைத்து வீதியால் சென்று வருபவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது..

I. தினுஷ வணிகத்தின் செயற்பாட்டினால் பூர்த்தி செய்யப்படுகின்ற மனிதத் தேவையானது யாது?
II. அதன மூலம் நிறைவேற்றப்படும் விருப்பங்களைக் குறிப்பிடுக.

36. கடலோரப் பகுதியில் வசிக்கும் அகிலா சிப்பி ஓடுகளைக் கொண்டு கைகளில் அணியும் அலங்காரங்களை தயாரிக்கும் வணிகத்தினை ஆரம்பித்தார். அதற்காக அவள் நூல், கத்தரிக்கோல் மற்றும் பசை என்பவற்றினை கொள்வனவு செய்ததுடன் அவளுடைய நண்பியான அயோமியின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

I. இந்த வணிகத்தில் காணக்கூடிய உற்பத்திக் காரணிகள் எவை?
II. நீங்கள் பெயர் குறித்த உற்பத்திக் காரணிகளை உதாரணங்களுக்கு ஊடாக விளக்குக.

37. லசின் என்பவரினால் கொழும்புப் பிரதேசத்தில் காலணிகளை கொள்வனவு செய்து அதிக அரசாங்க அலுவலங்கள் அமைந்துள்ள பத்தரமுல்ல பிரதேசத்தில் வணிக நிலையத்தினை ஆரம்பித்துள்ளார். ஆதன் அருகில் நிசால என்பவரால் காலணிகளை தயாரித்தல் மற்றும் காலணிகளை திருத்தி அமைக்கும் வணிகமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

I. லசின் மற்றும் நிசால என்பவர்களுடைய வணிகங்களின் தன்மைக்கு ஏற்ப எந்த வகையான வணிகங்களில் கீழ் அடங்குகின்றன என்பதனை தனித்தனியாக எழுதிக் காட்டுக.
II. லசின் வணிகம் தொடர்பாக ஆர்வம் காட்டும் 02 குழுவினரை பெயரிட்டு அவரகளின் நோக்கங்களை தனித்தனியாக எழுதிக் காட்டுக..

Commerce and Business Studies Branch